# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | மரியாதைராமன் நீதிபதியாகிறான்! | 5 |
| 2. | விருப்பமானதைக் கொடு! | 13 |
| 3. | எலுமிச்சங்காயளவு சாதம்! | 17 |
| 4. | ஆளுக்கு ஒரு கால்! | 21 |
| 5. | இரும்பை எலி தின்ற வழக்கு! | 25 |
| 6. | சாண் நீளமா? முழம் நீளமா? | 31 |
| 7. | யானைக்கும் பானைக்கும் சரி! | 35 |
| 8. | முத்துக்களை மோசடி செய்த வழக்கு! | 41 |
| 9. | நெல் வியாபாரியின் மோசடி! | 46 |
| 10. | மோதிர மோசக்காரன் கதை! | 52 |
| 11. | காதுக் கடுக்கனைத் திருடியவன்! | 56 |
| 12. | ஆளுக்குத் தகுந்த சாட்சி! | 60 |
| 13. | பூதக் கூண்டில் ஒற்றன்! | 65 |


## 1. மரியாதைராமன் நீதிபதியாகிறான்

நான்கு திருடர்கள் கூட்டாகத் திருடிக்கொண்டு வந்தார்கள். அவ்வப்போது சேரும் பொருளை ஒரு தோண்டியில் போட்டு நிரப்பி வந்தார்கள். தோண்டி நிறையப் பொன்னும் பொருளும் சேர்ந்தது. அதைப் பத்திரமாக ஓர் இடத்தில் வைக்க ஆசைப்பட்டார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடத்தைச் சொன்னார்கள். ஒருவர் கூட மற்றொருவர் யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் ஒருவருக்குக் கூட மற்றவன் பேரில் நம்பிக்கை கிடையாது. கடைசியாக நால்வரில் ஒருவன், ''நாம் வழக்கமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோமே, அவளிடம் இதைக் கொடுத்து வைப்போம். நல்ல கிழவி. பத்திரமாகக் காப்பாற்றி வைப்பாள். நாம் நால்வரும் போய்ச் சேர்ந்து கேட்டால் மட்டுமே தோண்டியைக் கொடுக்கச் சொல்லி அவளிடம் சொல்லுவோம்'' என்றான்.

மற்ற மூவரும் நாலாமவன் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

நால்வரும் பாட்டியிடம் போனார்கள். ''பாட்டி, நாங்கள் நால்வரும் பல நாட்களாக உழைத்துப் பாடு பட்டுக் கொஞ்சம் பொருள் சேர்த்திருக்கிறோம். அதை இந்தத் தோண்டியில் போட்டு வைத்திருக்கிறோம். இன்னும் சிறிது காலம் இந்த ஊரில் தங்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறகு இந்த ஊரை விட்டு நாங்கள் சென்று

RangaRakes

tamilnavarasam.com

விடுவோம். அதுவரை இந்தக் குடத்தைப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்து நாங்கள் போகும் போது கொடுக்கவும். ஆனால் ஒரு நிபந்தனை, நாங்கள் நால் வரும் வந்து கேட்டால்தான் நீ இந்தத் தோண்டியைத் தர வேண்டும். தனியாக யார் வந்து கேட்டாலும் நீ கொடுக்கக் கூடாது. ஏனென்றால் இதில் உள்ள பொருள் அனைத்தும் எங்கள் நால்வருக்கும் சொந்தம்'' என்றார்கள்.

பாட்டியும் தோண்டியை வாங்கி வைத்துக்கொண்டு அவர்கள் சொன்னவாரே நால்வரும் வந்து கேட்கும்போது தோண்டியைத் தருவதாகக் கூறினாள்.

சில நாட்கள் சென்றன.

ஒருநாள் பாட்டி வீட்டில் நால்வரும் சாப்பிட்டு விட்டுச் சற்று தூரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அந்த வழியாக மோர் விற்கும் பெண்மணி ஒருத்தி மோர் பானையுடன் வந்தாள். அவளைப் பார்த்ததும் திருடர்களில் ஒருவன், ''அண்ணே தாகமாகயிருக்கிறது. மோர் சாப்பிடலாமா?'' என்று கேட்டான்.

மற்றவர்கள் சரி என்று கூறவே மோர்க்காரியைக் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு குவளை வாங்கிச் சாப்பிட்டனர்.

''அண்ணே, மோர் நன்றாக இருக்கிறது. இந்த அம்மாளிடம் இருக்கும் மொத்த மோரையும் வாங்கி வைத்துக் கொண்டால் தாகம் எடுக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கலாம்'' என்றான் ஒருவன்.



''அது சரி, மொத்த மோரையும் வாங்குவதற்கு நம்மிடம் பானை எதுவும் இல்லையே!'' என்றான் ஒரு திருடன்.

''ஏன் நாம் வழக்கமாகச் சாப்பிடும் பாட்டியிடம் ஒரு தோண்டி வாங்கி வரச் சொல்லுவோம்'' என்று சொல்லிய மற்றொரு திருடன் தன் பக்கத்தில் இருந்த திருடனிடம், ''நீ போய்ப் பாட்டியிடம் ஒரு தோண்டி வாங்கி வா'' என்றான்.

அந்த நொடியில் பாட்டி வீட்டிற்குச் சென்ற திருடனின் மனதில் ஒரு சூழ்ச்சி தோன்றியது. பாட்டி யிடம், ''பாட்டி நாங்கள் உன்னிடம் கொடுத்து வைத்தோமே, அந்தத் தோண்டியை வாங்கி வரச் சொன்னார்கள்'' என்றான்.

''உன்னிடம் எப்படித் தர முடியும்? நீங்கள் நால் வரும் வந்து கேட்டால்தானே கொடுக்கச் சொன்னீர்கள். இப்போது நீ மட்டும் தனியாக வந்து கேட்கிறாயே!'' என்றாள் பாட்டி.

''என் பேச்சில் நம்பிக்கையில்லையா பாட்டி, அதோ அந்த மரத்தடியில் தான் எங்கள் நண்பர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ வேண்டுமானால் கொஞ்சம் வெளியே வா. அவர்களையே சொல்லச் சொல்கிறேன்'' என்றான் அந்தத் திருடன்.

பாட்டி குடிசைக்கு வெளியே வந்தாள்.

திருடன் மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் மூன்று திருடர்களைப் பார்த்து, ''பாட்டி தரமாட்டேனென்கிறாள்'' என்று உரக்கக் கத்தினான்.

மரத்தடியில் உட்கார்ந்திருந்த மூவரும் ''அவனிடம் கொடுத்தனுப்பு பாட்டி'' என்றார்கள்.

RangaRakes tamilnavarasam.com

பாட்டி, "தோண்டியா?" என்று கேட்டாள்.

"ஆமாம் பாட்டி தோண்டிதான். சீக்கிரம் கொடுத்தனுப்பு" என்று மூவரும் பாட்டிக்குக் கேட்கும் படியாகக் கத்தினார்கள்.

பாட்டி உள்ளே சென்று பொன்னும் பொருளும் அடங்கிய தோண்டியைக் கொண்டு வந்து ஏமாற்றுக்காரத் திருடனிடம் கொடுத்தாள்.

தோண்டியை வாங்கிக்கொண்ட ஏமாற்றுக்காரத் திருடன் வேறு வழியாக ஓடியே போய் விட்டான்.

தோண்டி வாங்கி வரச் சென்றவன் வெகுநேரமாகியும் திரும்பாதது குறித்துத் திருடர்கள் மூவருக்கும் சந்தேகம் ஏற்பட்டது. மூவரும் பாட்டியின் வீட்டுக்கு வந்தார்கள். "எங்கே அவன்?" என்று பாட்டியிடம் கேட்டார்கள்.

"அவன் அப்போதே தோண்டியை வாங்கிக் கொண்டு போய் விட்டானே!" என்றாள் பாட்டி.

"எந்தத் தோண்டி?" என்றான் திருடர்களில் ஒருவன்.

"ஏன்? நீங்கள் என்னிடம் கொடுத்து வைத்த தோண்டியைத்தான் வாங்கிக் கொண்டு போனான்" என்றாள் பாட்டி.

இதைக் கேட்டதும் திருடர் மூவரும் கோபத்துடன், "அதெப்படி நீ அவனிடம் தோண்டியைக் கொடுக்கலாம்? நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் தானே கொடுக்க வேண்டும். எங்கள் நால்வருக்கும் சொந்தமான ஒரு பொருளை நீ ஒருவனிடம் மட்டும் கொடுக்கலாமா? எங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நீ தான் கொடுக்க



வேண்டும். வா, நீதி மன்றத்திற்கு" என்று பாட்டியை நீதி மன்றத்திற்கு அழைத்தார்கள்.

நீதிபதியிடம் திருடர்கள் தங்கள் வழக்கைக் கூறினார்கள்.

வழக்கைக் கேட்ட நீதிபதி, "பாட்டி, இவர்கள் நால்வருக்கும் சேர்ந்த ஒரு பொதுச் சொத்து அந்தத் தோண்டி. இவர்கள் நால்வரும் வந்து கேட்டால் தான் அதனைக் கொடுக்க வேண்டுமென்று ஆரம்பத்திலேயே உங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் அதற்கு ஒப்புக்கொண்டீர்கள். ஆனால், முடிவில் நீங்கள் ஒப்புக்கொண்டதற்கு மாறாக ஒரு ஏமாற்றுக்காரனிடம் நால்வருக்கும் பொதுவான ஒரு தோண்டியைக் கொடுத்தனுப்பிவிட்டீர்கள். எனவே, நீங்கள் இந்த மூவருக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

நீதிபதி வழங்கிய தீர்ப்பைக் கேட்ட பாட்டி கோவென்று கதறினாள். "ஐயோ, நான் என்ன செய்வேன்? எப்படி இவர்கள் மூவருக்கும் சேர வேண்டிய தொகையைக் கொடுப்பேன்?" என்று புலம்பியவாறு வீதி வழியாக வந்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது மரியாதைராமன் என்ற சிறுவன் வீதியில் கோலி விளையாடிக் கொண்டிருந்தான். அவன் அழுது கொண்டே வரும் பாட்டியைப் பார்த்து விட்டான். தன் ஆட்டத்தைப் பாதியில் நிறுத்திக் கொண்டு, "என்ன பாட்டி ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

பாட்டி அழுதவாறே விவரம் பூராவற்றையும் மரியாதைராமனிடம் தெரிவித்தாள்.



RangaRakes tamilnavarasam.com





பூராக் கதையையும் கேட்ட ராமன், ''இது என்ன தீர்ப்பு? இந்த அநியாயத் தீர்ப்பு வழங்கியவன் வாயில் மண் விழுவதைப் போல் இந்தக் கோலிகள் குழியில் விழட்டும்'' என்று சொல்லித் தன் கையிலிருந்த கோலியை வீசி எறிந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க சேவகர்கள் இந்தச் செய்தியை அப்படியே அரசரிடம் தெரிவித்தனர்.


அரசன் மரியாதைராமனை அழைத்து வரச் சொன்னான்.

மரியாதைராமன் அரசவைக்கு வந்ததும், ''சிறுவனே, பாட்டி வழக்கில் நீதிபதி அநியாயமாகத் தீர்ப்பு வழங்கி விட்டதாகக் கூறினாயாமே! நீயாக இருந்தால் இந்த வழக்கில் எப்படித் தீர்ப்பு வழங்குவாய்?'' என்று கேட்டார்.

''அரசே, நான்கு பேரும் ஒன்றாக வந்து கேட்டால்தானே பாட்டி தோண்டியைக் கொடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது மூன்று பேர் தானே வந்து தோண்டியைக் கேட்கிறார்கள். இவர்கள் மூவரும் போய் நாலாவது ஆசாமியையும் தம்முடன் கூட்டிக் கொண்டு வரட்டும். அப்பொழுது பாட்டி நிச்சயம் அவர்கள் கொடுத்த தோண்டியைத் திரும்பக் கொடுத்து விடுவாள்'' என்றான்.

சிறுவன் மரியாதைராமன் அளித்த தீர்ப்பைக் கேட்டு மன்னர் மிகவும் வியந்து போனார். ராமனை அப்பொழுதே நீதிபதியாக நியமித்தார்.

RangaRakes tamilnavarasam.com



மரியாதைராமனிடம் அது முதல் பல வழக்குகள் வந்தன. அவற்றில் பல எவராலும் தீர்ப்பளிக்க முடியாதவை. நீதிபதிகளே குழம்பிப் போகக் கூடிய பல வழக்குகளிலும் மரியாதைராமன் தன் அறிவுத் திறமையினால் மிகச் சிறப்பாகத் தீர்ப்பு வழங்கியுள்ளான். அவற்றில் சிலவற்றை பின் வரும் கதைகளில் பார்ப்போம்.

## 2. விருப்பமானதைக் கொடு!

ஒரு வியாபாரி. அவர் கொஞ்சம் கொஞ்சமாக வியாபாரத்தில் பணம் சேர்த்துப் பதினாயிரம் வராகன்கள் சேர்த்து விட்டார். இந்தச் சமயத்தில் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டது. படுத்த படுக்கையாக விழுந்து விட்டார். அவருக்கு ஒரே மகன். அவன் சிறிய பையனாக இருந்தான்.

அந்த வியாபாரிக்கு வேறு உறவினர் எவரும் கிடையாது. 'தாம் இனிப் பிழைக்கமாட்டோமா?'' என அஞ்சினார். தாம் இறந்து விட்டால் தன் மகனை எவராவது ஏமாற்றித் தாம் அரும்பாடு பட்டுச் சேர்த்த பொருளை அபகரித்துச் சென்று விடுவார்களோ! என்று பயந்தார்.

தமக்கு மிகவும் வேண்டிய நண்பர் ஒருவரைக் கூப்பிட்டனுப்பினார். அவரிடம் தாம் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்த பதினாயிரம் வராகன்களையும் ஒப்படைத்தார்.

''நண்பனே, என் மகன் வளர்ந்து பெரியவனானதும் உனக்கு விருப்பமானதை அவனுக்குக் கொடு'' என்று கூறினார்.

சிறிது நாட்களில் அந்த வியாபாரியும் இறந்து விட்டார்.

பையன் வளர்ந்து பெரியவனானான். தம் தகப்பனாரின் நண்பரிடம் சென்றான். அவரிடம் தம் தகப்பனார் கொடுத்து வைத்திருந்த பதினாயிரம் வராகன்களைத் திரும்பக் கொடுக்குமாறு கேட்டான்.

RangaRakes tamilnavarasam.com






வியாபாரியின் நண்பன் பெரிய மோசக்காரன்.

''உன் தகப்பனார் இறக்கும்போது எனக்கு விருப்பமானதை உனக்குக் கொடுக்கச் சொன்னார். வீணாகப் பூராப் பணத்துக்கும் ஆசைப்படாதே. இந்தா ஆயிரம் வராகன். இதை எடுத்துச் சென்று எங்காவது பிழைத்துக் கொள்! என்று ஆயிரம் வராகன்கள் அடங்கிய பணமுடிப்பை அவனிடம் கொடுத்தான்.

வியாபாரியின் மகனுக்கு இதுபெரும் அதிர்ச்சியைத் தந்தது. மிகவும் நல்லவன் என்று தன் தந்தையார் நம்பிய அவருடைய நண்பனின் செய்கை அவனுக்கு அளவற்ற வேதனையைத் தந்தது. நேரே மரியாதைராமனிடம் சென்று முறையிட்டான்.

மரியாதைராமன் வியாபாரியின் நண்பனை அழைத்தான்.

''இந்தச் சிறுவன் கூறுவது உண்மையா?'' என்று அவனிடம் கேட்டான் மரியாதைராமன்.

''ஆம், அய்யா! இவன் தந்தை என்னிடம் பதினாயிரம் வராகன்களைக் கொடுத்து, இவன் வளர்ந்து பெரியவனானதும் எனக்கு விருப்பமானதைச் சிறுவனுக்குக் கொடுக்கச் சொன்னார். அதன்படி நான் இவனுக்கு ஆயிரம் வராகன்கள் கொடுத்துள்ளேன். அதுவே பெரிய தொகை'' என்றான் மோசக்காரன்.

''உம்முடைய நண்பர் சொன்னவாறு நீங்கள் நடந்து கொள்ளவில்லையே!'' என்றான் மரியாதைராமன்.

மோசக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

RangaRakes tamilnavarasam.com



மரியாதைராமனே தொடர்ந்து பேசலானான்.

''அய்யா, இவர் தந்தையார் ஒப்படைத்த பதினாயிரம் வராகன்களில் நீர் ஒன்பதினாயிரம் வராகன்கள் எடுத்துக் கொண்டீர். அதுதான் உமக்கு விருப்பமானது. எனவே உமக்கு விருப்பமான-நீர் விரும்பி எடுத்துக் கொண்ட அந்த ஒன்பதினாயிரம் வராகன்களைத்தான் நீ இந்தச் சிறுவனுக்குத் தரவேண்டும்'' என்று தீர்ப்பு வழங்கினான்.

இந்தத் தீர்ப்பைக் கேட்டுச் சிறுவன் மிகவும் மகிழ்ந்தான். பேராசைக்காரன் தன்னுடைய பேராசைக்கு இது சரியான தண்டனைதான் என்று நினைத்தவாறே ஒன்பதினாயிரம் வராகன்களை அந்தச் சிறுவனுக்குக் கொடுத்து அனுப்பினான்.

## 3. எலுமிச்சங்காயளவு சாதம்

ஒரு தேசாந்திரி ஓர் உணவு விடுதிக்குச் சென்றான். சாப்பிட உணவு கொடுக்கும்படி அந்த உணவு விடுதி நடத்தும் பெண்மணியிடம் கேட்டான். அவளோ சாப்பாடெல்லாம் ஆகிவிட்டது ஒன்றும் இல்லை என்றாள்.

''அம்மா பசி காதை அடைக்கிறது. ஒரு பணம் தருகிறேன். ஒரு எலுமிச்சங்காயளவு சாதம் போட்டாலும் பரவாயில்லை'' என்றான் தேசாந்திரி.

அந்தப் பெண்மணி தேசாந்திரியிடமிருந்து ஒரு பணத்தை வாங்கிக் கொண்டாள்.

தேசாந்திரி கைகால் அலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். அவன் முன்னால் ஒரு வாழை இலையைப் போட்டாள் அந்தப் பெண்மணி. பின்னர் இலையில் ஓர் எலுமிச்சங்காயளவு சாதத்தை வைத்துச் சிறிது குழம்பு விட்டு, ''சாப்பிடு!'' என்றாள்.

''என்ன, அநியாயமாக இருக்கிறதே! ஏதோ பேச்சுக்காகச் சொன்னேன். ஒரு பணத்திற்கு எலுமிச்சங்காயளவு சாப்பாடா? உன் சாப்பாடும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். என்பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடு. நான் பட்டினியாகவே இருந்து விட்டுப் போகிறேன்'' என்றான் தேசாந்திரி.

அந்தப் பெண்மணியோ தான் வாங்கிய பணத்தைத் திரும்பத் தரமுடியாது என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள்.



RangaRakes
tamilnavarasam.com






தேசாந்திரி மரியாதைராமனிடம் சென்று தன் வழக்கைக் கூறினான்.

''அய்யா, சும்மா ஒரு பேச்சுக்காக அந்த அம்மாவிடம் ஒரு எலுமிச்சங்காயளவு சாதம் போட்டால் ஒரு பணம் தருகிறேன் என்று கூறினேன். ஆனால், அந்த அம்மாளோ என்னிடம் ஒரு பணம் வாங்கிக் கொண்டு உண்மையாகவே எலுமிச்சங்காயளவு சாதம் போட்டார்கள். சாதம் வேண்டாம். பணத்தைத் திரும்பக் கொடுத்து விடு என்றால் பணத்தையும் திரும்பத் தரமாட்டேன் என்கிறார்கள்'' என்றான் தேசாந்திரி.

''இவர் சொல்லுவது உண்மையா?'' என்று உணவுவிடுதிப் பெண்மணியிடம் கேட்டான் மரியாதைராமன்.

''நீங்கள் இவருக்குப் போட்ட சாதத்தைக் கொண்டு வந்து காட்ட முடியுமா?'' என்று அந்தப் பெண்மணியிடம் கேட்டான் மரியாதைராமன்.

''அப்படியே இலையில் தான் இருக்கிறது. இதோ கொண்டு வருகிறேன்'' என்று வீட்டுக்குப் போய் இலையுடன் சாதத்தைக் கொண்டு வந்து மரியாதை ராமனிடம் காட்டினாள் அந்தப் பெண்மணி.

இலையில் இருந்த சாதத்தைக் கூர்ந்து பார்த்த மரியாதைராமன், ''ஒரு சாதம் கூட எலுமிச்சங்காயளவு இல்லையே?'' என்று அந்த உணவு விடுதிப் பெண்மணியிடம் கேட்டான்.

''எலுமிச்சங்காயளவு சாதமா?'' என்று வாயைப் பிளந்தாள் அந்தப் பெண்மணி.

RangaRakes tamilnavarasam.com

"ஆமாம் இவர் எலுமிச்சங்காயளவுள்ள சாதம் தானே போடச் சொன்னார். நீ பல சாதங்களைக் கொண்டு எலுமிச்சங்காயளவு போட்டிருக்கிறாய். இதை ஏற்றுக் கொள்ள முடியாது. நீ ஒப்புக் கொண்டபடி எலுமிச்சங் காயளவுள்ள சாதத்தைப் போட முடியுமானால் போடு; இல்லாவிட்டால் இவருக்கு நீ பத்து பணம் அபராதம் செலுத்த வேண்டும்" என்றான் மரியாதைராமன்.

எலுமிச்சங்காயளவுள்ள சாதம் போட முடியாத உணவுவிடுதிப் பெண்மணி தன்தோல்வியை ஒப்புக் கொண்டு தேசாந்திரிக்குப் பத்து பணம் அபராதமாகத் தந்தாள்.

# 4. ஆளுக்கு ஒரு கால்

நான்கு பேர் கூட்டாகப் பஞ்சு வியாபாரம் செய்து வந்தனர். நாளடைவில் பஞ்சுக் கடையில் ஏராளமான எலிகள் சேர்ந்து பஞ்சுப் பொதிகளை நாசமாக்கி விட்டன.

எலிகளை ஒழிப்பதற்காகப் பூனை ஒன்றை வளர்க்கலாம் என்று நால்வரில் ஒருவன் அபிப்பிராயம் சொன்னான், மற்ற மூவரும் அவன் கருத்தை ஆதரித்தனர்.

நால்வருமாகச் சேர்ந்து ஒரு பூனையை வளர்க்க ஆரம்பித்தனர். பூனை வந்ததிலிருந்து எலிகளின் உபத்திரவம் குறைந்தது. இதன் காரணமாக நால்வருக்கும் பூனையின் மேல் மிகுந்த அன்பு ஏற்பட்டு விட்டது. பூனைக்குச் சகலவித உபசாரங்களும் செய்ய ஆரம்பித்தனர். அத்துடன் நில்லாமல் அதன் கால் களுக்குத் தண்டை கொலுசு முதலியவைகளை அணி வித்து அழகுபடுத்த நினைத்தார்கள்.

இதை நடைமுறைக்கு கொண்டு வரும்போது பல சிக்கல்கள் வந்தன. எனவே வியாபாரிகள் நால்வரும் பூனையின் நான்கு கால்களை ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக் கொண்டனர். அவரவர்க்குச் சொந்தமான கால்களில் தங்களுக்கு விருப்பமான அணிகலன்களைப் பூட்டி மகிழ்ந்தனர்.

ஒரு நாள் பூனை நொண்டிக் கொண்டே வந்தது. இதைப் பார்த்த வியாபாரிகளில் ஒருவன் தன் நண்ப னிடம், "நண்பா, உனக்குச் சொந்தமான காலில் அடிபட்டு விட்டது. ஜாக்கிரதையாக மருந்து போட்டுக் குணப்படுத்து" என்றான்.

RangaRakes tamilnavarasam.com

அந்தக் காலுக்கு உரியவனும் பூனையின் காயத்தைத் துடைத்து எண்ணெய்த் துணியினால் அதைச் சுற்றி வைத்தான்.

அன்று இரவு பூனை விளக்குப் பக்கம் போகவே அதன் காலில் சுற்றியிருந்த துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. தன் காலில் சுற்றப்பட்டிருந்த துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டதும் பூனை மிரண்டு போய்ப் பஞ்சு மூட்டைகளின் மேல் ஓடியது. உடனே பஞ்சு மூட்டைகள் அனைத்திலும் நெருப்பு பிடித்துக் கொண்டது.


முடிவில் அவர்கள் வைத்திருந்த பஞ்சு மூட்டைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.

வியாபாரிகளில் மற்ற மூவரும் துணி சுற்றியவனைப் பார்த்து, ''நீ எண்ணெய்த் துணி சுற்றி வைத்ததால் தான் இந்த நஷ்டம் ஏற்பட்டது. எனவே எங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நீதான் கொடுக்க வேண்டும்'' என்றனர்.

அவனோ தான் வேண்டுமென்றே செய்யவில்லை என்றும் எதிர்பாரா வகையில் நடந்து விட்டதற்குத் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும் எவ்வளவோ, கேட்டுக் கொண்டான்.

மற்ற மூவரும் அவன் பேச்சைக் கேட்கவில்லை. அவனை மரியாதைராமனிடம் இழுத்துச் சென்றனர். மரியாதைராமன் அவர்கள் கூறியதைக் கவனமாகக் கேட்டான். பின்னர் கீழ்க்கண்டவாறு தன் தீர்ப்பை வழங்கினான்.





RangaRakes tamilnavarasam.com

பூனையின் ஒரு காலில் அடிபட்டு உள்ளது. அந்தக் காலால் நடக்கவோ, ஓடவோ, அதனால் முடியாது. அந்தச் சமயத்தில் அது மற்ற மூன்று கால்களால்தான் ஓடியிருக்க வேண்டும். எனவே உங்கள் மூவருக்கும் சொந்தமான கால்களால் ஓடித்தான் அது நஷ்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. எனவே, நீங்கள் மூவரும்தான் இந்த நாலாமவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும்'' என்றான்.

# 5. இரும்பை எலி தின்ற வழக்கு

கண்ணுசாமி என்னும் பெயருடைய ஒருவன் இரும்பு வியாபாரம் செய்து வந்தான். திடீரென்று ஒரு நாள் புண்ணியத்தலங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. கைவசம் உள்ள இரும்பை உடனடியாக விற்பனை செய்யவும் முடியவில்லை. எனவே தனது நண்பனான முத்து என்பவனிடம் சென்றான்.

''முத்து, நான் என் குடும்பத்தாருடன் தல யாத்திரை போக நினைத்திருக்கிறேன். என்னிடம் பத்து பாரம் இரும்பு உள்ளது. அதை உன்னுடைய புறக் கடையில் போட்டு வைக்கிறேன். நான் திரும்பி வந்ததும் அதைப் பெற்றுக் கொள்கிறேன். இந்த உதவியைச் செய்வாயா?'' என்று முத்துவிடம் கேட்டான் கண்ணுசாமி..

''ஓ, அதற்கென்ன! தாராளமாக உன்னிடம் இருக்கும் இரும்பை என் வீட்டுக் கொல்லைப் புறத்தில் போட்டு வை. நான் என்ன அதற்குச் சோறும் தண்ணீருமா போடப் போகிறேன். நீ எப்போது வந்தாலும் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்'' என்றான் முத்து.

கண்ணுசாமியும் தன்னிடமிருந்த இரும்பு முழுவதையும் முத்துவின் வீட்டில் கொண்டு வந்து போட்டான். பின்னர் அவன் தலயாத்திரைக்குப் புறப்பட்டு விட்டான்.

கண்ணுசாமி ஊரை விட்டுப் போனதும் அவன் கொடுத்துச் சென்ற இரும்பை நல்ல விலைக்கு விற்று விட்டான் முத்து.



RangaRakes
tamilnavarasam.com

பல மாதங்கள் கழிந்தன. கண்ணுசாமி தலயாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தான். தன் நண்பன் முத்துவிடம் சென்று, ''நண்பா, நான் உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போன இரும்பை திரும்பக் கொடுக்கிறாயா?'' என்று கேட்டான்.

''இரும்பா? அதை எலி தின்று விட்டதே! என்றான் முத்து.

விதண்டாவாதமாகப் பேசுகிறவனிடம் நியாயம் பேசிப் பயனில்லை என்று உணர்ந்த கண்ணுசாமி, நேராக மரியாதைராமனிடம் சென்றான். முத்து தன்னை ஏமாற்றி விட்டதல்லாமல் விதண்டாவாதமாகப் பேசுவதையும் தெரிவித்தான்.

முழுக் கதையையும் கேட்ட மரியாதைராமன், ''நீ வரும்போது அவனிடம் கோபமாகப் பேசியோ சண்டைபோட்டு விட்டோ வந்தாயா?'' என்று கேட்டான்.

''நான் அவனிடம் ஒன்றும் பேசவில்லை நேராக உங்களிடம்தான் வருகிறேன்'' என்றான் கண்ணுசாமி.

''நல்லவேலை செய்தாய் முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். நான் இதற்கொரு யோசனை சொல்கிறேன். அதன்படி நட, மறுநாளே அவன் என்னிடம் வந்து நிற்பான். அப்பொழுது பேசிக் கொள்வோம்'' என்று கூறிய மரியாதைராமன் கண்ணுசாமியின் காதில் இரகசியமாக ஏதோ சொல்லியனுப்பினான்.

மறுநாள் கண்ணுசாமி முத்துவின் வீட்டுக்குச் சென்றான். அவன், இரும்பு விஷயமாகத்தான் மீண்டும் தன் வீட்டுக்கு வந்திருக்கிறானோ என்று நினைத்தான் முத்து.



''முத்து, இரும்பு விஷயமாக நான் இப்போது வரவில்லை அது பழைய இரும்புதான்; அதை இலேசில் விற்க முடியாது. விற்கப் போனாலும் வாங்குவதற்கு ஆள் கிடையாது. அது போனதே ஒரு விதத்தில் நல்லதுதான். இல்லாவிட்டால் அதை வேறு சுமந்து கொண்டு என் வீட்டில் சேர்ப்பிக்க வேண்டும்'' என்றான் கண்ணுசாமி.

முத்துவுக்குக் கண்ணுசாமியின் பேச்சு பரம திருப்தியாக இருந்தது.


''ஆமாம், ஆமாம், நீ சொல்வது உண்மை தான்'' என்றான் முத்து.

''முத்து நேற்று உன் மகன் பள்ளிக்கூடத்தில் இருந்து வரும்போது அவனை என் மனைவி பார்த்து விட்டாள். அவனைப் பார்த்ததும் தன் தம்பி மகன் ஜாடையாக இருப்பது அவளுக்குத் தெரிந்தது. அவளுக்குத் தன் தம்பி மகன் பேரில் கொள்ளை ஆசை. உன் மகனைத் தன்கூட இரண்டு நாட்கள் வைத்திருக்கப் பிரியப் படுகிறாள். அதற்காகத்தான் வந்தேன்'' என்றான் கண்ணுசாமி.

''இவ்வளவு பிரியமாகக் கூப்பிடும் போது என்னால் எப்படி மறுப்பு சொல்ல முடியும்? இரண்டு நாட்கள் வைத்திருந்து பின்னர் என் மகனைக் கொண்டு வந்து விட்டு விடுங்கள்'' என்று முத்து தன் மகனைக் கூப்பிட்டுக் கண்ணுசாமியுடன் அனுப்பினான்.

இரண்டு நாட்கள் ஆயிற்று. கண்ணுசாமி முத்துவின் மகனைக் கொண்டு வந்து ஒப்படைக்க வில்லை. மூன்று நாட்கள் ஆகியும் கண்ணுசாமி முத்துவின் வீட்டுப் பக்கமே திரும்பவில்லை.

RangaRakes tamilnavarasam.com





சந்தேகம் கொண்ட முத்து, கண்ணுசாமியின் வீட்டுக்குப்போய் ''எங்கே, என் மகன்?'' என்று கேட்டான்.

''நான் என்னவென்று சொல்லுவேன்? உன் வீட்டுக்குக் கூட்டி வரும்போது வழியில் ஒரு பெரிய பருந்து வந்து உன் மகனைத் தூக்கிக் கொண்டு போய் விட்டது'' என்றான் கண்ணுசாமி.



RangaRakes tamilnavarasam.com

''குழந்தையையாவது, பருந்தாவது தூக்கிச் செல்வதாவது? என்ன உளறுகிறாய்? உன்னைச் சும்மா விட்டேனா பார்!'' என்று ஆவேசமாகக் கத்தி விட்டு நேரே மரியாதைராமனிடம் சென்று வழக்கைக் கூறினான்.

அப்படியா! நான் கண்ணுசாமியை வரவழைத்து நியாயம் கேட்கிறேன்'' என்று கூறிய மரியாதைராமன் கண்ணுசாமியை அழைத்து வர ஆள் அனுப்பினான்.

கண்ணுசாமி வந்ததும், ''இவருடைய குழந்தையைப் பருந்து தூக்கிக் கொண்டுபோய் விட்டது என்று சொன்னீர்களாமே! இம்மாதிரி அதிசயம் எங்காவது நடைபெறுமா?'' என்று கேட்டான் மரியாதைராமன்.

''ஏன் நடக்காது? இரும்பை எலி தின்னும் போது, குழந்தையைப் பருந்து ஏன் தூக்கிச் செல்லக் கூடாது?'' என்றான் கண்ணுசாமி.

''எனக்கும் ஒன்றும் புரியவில்லையே? இரும்பை யாவது எலி தின்னுவதாவது'' என்று ஒன்றும் அறியாதவன் போல் கேட்டான் மரியாதைராமன்.

''அய்யா, என்னை மன்னித்து விடுங்கள். நான் தான் இவரை ஏமாற்ற நினைத்து அந்த மாதிரிப் பொய் சொன்னேன். இவருடைய இரும்பு விற்ற பணத்தைத் திரும்பக் கொடுத்து விடுகிறேன். என் மகனைத் திரும்பக் கொடுத்துவிடச் சொல்லுங்கள்'' என்றான் முத்து.

''அப்படி வா, வழிக்கு?'' என்று கூறிய மரியாதை ராமன் இரும்பு விற்ற பணத்துடன் ஐம்பது பணம் சேர்த்துக் கண்ணுசாமிக்கு வாங்கிக் கொடுத்து அவனிட மிருந்த முத்துவின் மகனை முத்துவிடம் ஒப்படைத்தான்.

## 6. சாண் நீளமா? முழம் நீளமா?

வையாபுரி வட்டிக்குக் கடன் கொடுப்பவர். அவரிடம் முருகேசன் என்ற வியாபாரி நூறு வராகன்கள் கடன் வாங்கியிருந்தான்.

வையாபுரி முருகேசனிடம் பலமுறை அலைந்தார். முருகேசனோ வட்டியும் தரவில்லை; அசலையும் தரவில்லை.

ஒருநாள் வையாபுரி முருகேசனிடம் தன் பணத்தை வட்டியுடன் சேர்த்து உடனடியாகக் கொடுத்துவிடுமாறு கடுமையாகக் கேட்டார்.

''நாளைய தினம் காலையில் நான் வயலில் வேலை செய்து கொண்டிருப்பேன். அப்பொழுது கடன் பத்திரத்தைக் கொண்டு வாரும். அசலும் வட்டியும் கொடுத்து விடுகிறேன்'' என்றான் முருகேசன்.

மறுநாள் வையாபுரி கடன் பத்திரத்துடன் முருகேசனின் வயலுக்குப் போனார். வையாபுரியைப் பார்த்த முருகேசன் 'உங்கள் கடனைத் தீர்த்து விடுகிறேன். கடன் பத்திரத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

''இதோ கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறிய வையாபுரி தம் மடியில் இருந்த கடன் பத்திரத்தை எடுத்து முருகேசனிடம் காண்பித்தார்.

உடனே முருகேசன் சட்டென்று அவர் கையில் இருந்த கடன் பத்திரத்தைப் பிடுங்கிச் சுக்கல் சுக்கலாகக்

RangaRakes tamilnavarasam.com

கிழித்தான். பக்கத்தில் குவிக்கப் பட்டிருந்த காய்ந்த சருகுகள் நெருப்புப் பிடித்து எரிந்து கொண்டிருந்தன. அந்த நெருப்பில் துண்டு துண்டாகக் கிழித்த கடன் பத்திரத்தைப் போட்டு விட்டான் முருகேசன்.

இதைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டார் வையாபுரி.

''பணமா வேணும் உனக்கு? இனி உனக்கு ஒரு காசு கூடத் தர முடியாது. எங்கே போய் வேண்டுமானாலும் பிராது செய்து கொள்'' என்று அகம்பாவத்துடன் கூறினான் முருகேசன்.

வையாபுரிக்கு ஒன்றும் புரியவில்லை. கடன் பத்திரம் இல்லாமல் அவன் மேல் பிராது செய்ய முடியாது என்பது தெரியும். இருந்தாலும் நேரே மரியாதைராமனிடம் போய் முறையிட்டார்.

அவர் சொன்னதை முழுவதும் கேட்ட மரியாதை ராமன்! ''முருகேசன் எழுதிக் கொடுத்த கடன் பத்திரம் எவ்வளவு நீளம் இருக்கும்?'' என்று கேட்டான்.

''ஒரு சாண் நீளம்தான் இருக்கும்'' என்றார் வையாபுரி.

''நாளைய தினம் இதே கேள்வியை உங்களிடம் கேட்கும்போது ஒரு முழ நீளம் இருக்கும் என்று நீங்கள் சொல்ல வேண்டும்'' என்றான் மரியாதைராமன்.

வையாபுரியும் மரியாதைராமன் சொன்னபடி மறுநாள் வழக்கு மன்றத்திற்கு வந்தார்.

மரியாதைராமன் முருகேசனிடம், ''நீர் வையாபுரியிடம் நூறு பணம் கடன் வாங்கியதுண்டா?'' என்று கேட்டார்.







RangaRakes
tamilnavarasam.com

''இல்லை, அய்யா!'' என்றான் முருகேசன்.

''நீ கடன் வாங்கிக் கொண்டு கடன் பத்திரம் கூட எழுதிக் கொடுத்ததாக வையாபுரி சொல்கிறாரே!''

''பொய், நான் இவரிடம் கடன் வாங்கவுமில்லை. கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கவுமில்லை'' என்றான் முருகேசன்.

மரியாதைராமன் வையாபுரியின் பக்கமாகப் பார்த்து, ''இவர் உம்மிடம் கடன் வாங்கிக் கொண்டு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்ததாகச் சொல்கிறீர்களே, அதன் நீளம் எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டான்.

''ஒரு முழ நீளம் இருக்கும்'' என்று கையினால் அளந்து காட்டினார் வையாபுரி.

இதைப் பார்த்த முருகேசன், ''ஏன் புளுகுகிறாய்? நீ கொடுத்த நூறு ரூபாய் பணத்துக்கு முழ நீளப் பத்திரம் எழுதிக் கொடுப்பார்களா? ஒரு சாண் நீளம் கூட இருக்காது. முழநீளம் இருக்கும் என்று புளுகுகிறாயே!'' என்று ஆவேசமாகக் கூறினான்.

இதைக் கேட்ட மரியாதைராமன், ''ஆமாம் அவரை நான்தான் அப்படிப் புளுகச் சொன்னேன். அப்படி அவர் புளுகியதால்தான் உன் வாய் மூலமாகவே உண்மை வந்து விட்டது. உன் போன்ற ஏமாற்றுக்காரர்களைச் சும்மாவிடக் கூடாது'' என்று கூறியதுடன், வையாபுரிக்குச் சேர வேண்டிய நூறு பணத்தை வட்டியுடன் அவன் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்றும், வாங்கிய பணத்தை இல்லையென்று சொன்னதுடன், எழுதிக் கொடுத்த கடன் பத்திரத்தைக் கிழித்துத் தீயில் போட்டுப் பொசுக்கி யதற்காக ஐம்பது கசையடிகள் பெற்றுக் கொள்ள வேண்டு மென்றும் தீர்ப்பளித்தான்.

# 7. யானைக்கும் பானைக்கும் சரி

பெரியசாமி என்பவர் ஒரு பெரிய செல்வந்தர். அவருக்கு ஒரே மகன். அவனுக்குத் திருமண வயது வந்துவிட்டது. திருமணத்தை விமரிசையாக நடத்த வேண்டுமென்று நினைத்தார் பெரியசாமி.

கல்யாண ஊர்வலத்தில் யானைமீது தன் மகன் ஊர்வலமாகச் செல்ல வேண்டுமென்று நினைத்தார்.

பக்கத்து ஊரில் நைனா முகமது என்றொருவர் இருந்தார். அவர் காட்டில் இருக்கும் மரங்களை வெட்டி எடுத்து வந்து வியாபாரம் செய்வார். வெட்டிய மரங்களைக் காட்டிலிருந்து எடுத்துவர ஒரு யானையை வைத்துக் கொண்டிருந்தார். அவர் யானையைக் கல்யாண ஊர்வலத்திற்குக் கேட்கலாம் என்ற எண்ணத்துடன் பெரியசாமி நைனா முகமதுவின் வீட்டிற்குச் சென்றார்.

''என்ன பெரியசாமி, ஏது இவ்வளவ தூரம்?'' என்றார் நைனா முகமது.

''என் மகன் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறேன். கல்யாண ஊர்வலத்திற்கு ஒரு யானை வேண்டும். அதற்காகத் தான் உன்னிடம் வந்தேன்'' என்றார் பெரியசாமி.

''ஒ, அதற்கென்ன? கல்யாண ஊர்வலம் இரவில் தானே நடக்கும். அப்பொழுது யானைக்கு இங்கு வேலை கிடையாது. நீ தாராளமாக யானையைக் கொண்டு செல்லலாம். ஊர்வலம் முடிந்ததும் யானையைத் திருப்பி அனுப்பிவிடு'' என்றார் நைனா முகமது.

RangaRakes tamilnavarasam.com

நைனா முகமது தாம் சொன்னவாறே கல்யாண ஊர்வலத்திற்குத் தம்முடைய யானையை அனுப்பி வைத்தார்.

ஊர்வலம் பாதி தூரம் வந்து கொண்டிருக்கும் போது யானை மயக்கம்போட்டுக் கீழே விழுந்தது. விழுந்த பின்னர் பரிசோதித்ததில் அது இறந்து விட்டது தெரிந்தது.

கல்யாண ஊர்வலத்தில் யானை இறந்து போனதற்காகப் பெரியசாமி மிகவும் வருந்தினார். நைனா முகமதுவிடம் வேறு யானை வாங்கிக் கொடுத்து விடுவதாகக் கூறினார். இல்லாவிட்டால் அவர் எவ்வளவு தொகை கேட்டாலும் கொடுத்து விடுவதாகக் கூறினார்.

நைனா முகமதுவோ, ''அதெல்லாம் முடியாது. என்னுடைய யானைதான் எனக்கு வேண்டும்'' என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

பெரியசாமிக்கு என்ன செய்வதென்று தோன்ற வில்லை. மரியாதைராமனிடம் சென்று தம் வழக்கைக் கூறினார்.

பெரியசாமியின் வழக்கைக் கேட்ட மரியாதைராமன் நைனா முகமதுவைக் கூட்டி வரச் சொன்னார். நைனா முகமது வழக்கு மன்றத்திற்கு வந்ததும், ''ஏதோ எதிர்பாராத விதமாக உங்கள் யானை இறந்து போய்விட்டது. அந்த யானைக்காக நீங்கள் எவ்வளவு நஷ்ட ஈடு கேட்டாலும் பெரியசாமி கொடுக்கத் தயாராக இருக்கிறார். அல்லது வேறு ஒரு யானை வாங்கித் தரச் சொன்னாலும் வாங்கித் தரச் சம்மதிக்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று நைனா முகம்மதுவிடம் கேட்டான் மரியாதைராமன்.

RangaRakes



என்னுடைய யானைதான் எனக்கு வேண்டும் என்று மீண்டும் பிடிவாதமாகக் கூறினார் நைனா முகமது.

''சரி, நீங்கள் இருவரும் நாளைய தினம் இந்த சபைக்கு வாருங்கள், என்னுடைய தீர்ப்பை நான் வழங்குகிறேன்'' என்றான் மரியாதைராமன்.

நைனா முகமது சென்றவுடன் பெரியசாமியை மட்டும் தம்மிடம் அழைத்து வரச் சொன்னான் மரியாதைராமன். அவர் வந்ததும் அவரிடம் ''நாளைய தினம் குறித்த நேரத்திற்கு நீங்கள் சபைக்கு வராதீர்கள். நான் நைனா முகமதுவையே உங்கள் வீட்டுக்கு அனுப்பி உங்களைக் கூட்டி வரச் சொல்கிறேன். அவர் வரும் போது நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள பழம் பானைகளைக் கதவின் பின்னால் அடுக்கி வைத்துவிட்டுக் கதவை மூடி வைத்திருங்கள். நைனா முகம்மது கதவைத் திறந்து கொண்டு வந்ததும் பானைகள் எல்லாம் உடைந்து நொறுங்கி விடும். நீங்கள் சபைக்கு வந்து என்னுடைய பழம் பானைகள் தான் எனக்கு வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்று உபாயம் சொல்லி அனுப்பி வைத்தான் மரியாதைராமன்.

மறுநாள் பெரியசாமி குறித்த நேரத்திற்கு வழக்கு மன்றத்திற்கு வரவில்லை. மரியாதைராமன் நைனா முகமதுவைப் பார்த்து, ''நீங்களே பெரியசாமி வீட்டுக்குப் போய் அவரைக் கையுடன் கூட்டி வாருங்கள்'' என்று அனுப்பினான்.

நைனா முகமதுவிற்கு ஆத்திரம் ஒரு பக்கம். தன் யானை போனதுமல்லாமல் வழக்கு மன்றத்திற்கும்

tamilnavarasam.com

பெரியசாமி வீட்டிற்கும் அலைய வேண்டி வந்து விட்டதே என்று கோபம் ஒரு பக்கம். அதே வேகத்தில் பெரியசாமி வீட்டுக்கு நைனா முகமது சென்றபோது பெரியசாமியின் வீட்டுக் கதவு மூடியிருந்தது. உள்ளே பெரியசாமியின் குரல் கேட்டது.

'வழக்கு மன்றத்திற்கு உரிய நேரத்திற்கு வராமல் தம்மை அலைக்கழிக்கிறானே' என்று ஆத்திரத்துடன் கதவைப் பலமாகத் திறந்தபடியே உள்ளே நுழைய முயன்றான்.

அச்சமயத்தில் மரியாதைராமன் சொன்னவாறு கதவின் பின்னால் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழம் பானைகள் உடைந்து நொறுங்கிப் போயின.

இதைப் பார்த்த பெரியசாமி உள்ளேயிருந்து ஓடிவந்து, ''அடப்பாவி, என் முன்னோர்கள் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்த பானைகளை உடைத்து விட்டாயே!'' என்று கத்தினார்.

''ஏதோ தெரியாத்தனமாக நடந்து விட்டது. நான் இந்தப் பானைகளுக்குப் பதில் புதிய பானைகளே வாங்கித் தந்து விடுகிறேன்'' என்றார் நைனா முகமது.

''அதெல்லாம் முடியாது. எனக்கு இதே பானைகள் தான் வேண்டும். வா, மரியாதைராமனிடம் செல்வோம்'' என்று கூறியவாறே நைனா முகமதுவை அழைத்துக் கொண்டு மரியாதைராமனின் சபைக்குச் சென்றார் பெரியசாமி.

''அய்யா, என் வீட்டிலுள்ள பழம் பானைகளை எல்லாம் இவர் உடைத்து விட்டார்'' என்றார் பெரியசாமி.






RangaRakes
tamilnavarasam.com

‘‘அதற்கு எவ்வளவு தொகை கேட்டாலும் நான் கொடுத்து விடுகிறேன். அல்லது புதிய பானைகள் வாங்கித் தரச் சொன்னாலும் தந்து விடுகிறேன்’’ என்றார் நைனா முகமது.

‘‘எனக்கு அதெல்லாம் தேவையில்லை. என்னுடைய பழம் பானைகளே எனக்கு வேண்டும்’’ என்றார் பெரியசாமி.

‘‘அப்படியானால் யானைக்கும் பானைக்கும் சரியாகிவிட்டது. நீங்கள் இரண்டு பேரும் வீட்டிற்குப் போகலாம்’’ என்றான் மரியாதைராமன்.

# 8. முத்துக்களை மோசடி செய்த வழக்கு

மாணிக்கம் என்பவரிடம் இரண்டு நல்முத்துக்கள் இருந்தன. அவை இரண்டும் விலை மதிப்பு உடையவை. நீண்ட நாட்களாக அவைகளை அவர் காப்பாற்றி வந்தார்.

ஒருமுறை அவர் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிட்டது. அந்த இரண்டு நல்முத்துக்களையும் வீட்டில் வைத்து விட்டுச் செல்ல அஞ்சினார். தாம் இல்லாத சமயத்தில் திருடர் எவராவது வீட்டில் புகுந்து அந்த நல்முத்துக்களைத் திருடிக்கொண்டு போய் விடக் கூடுமென நினைத்தார். எனவே அவர் தம்முடைய நண்பனான கேசவன் என்பவனிடம் சென்றார்.

‘‘கேசவா, நான் வியாபார விஷயமாக வெளியூர் செல்கிறேன். என்னிடம் இரண்டு நல்முத்துக்கள் இருக்கின்றன. அவற்றை உன்னிடம் கொடுத்து வைத்துவிட்டுப் போகிறேன்’’ என்று கூறியவாறே இரண்டு நல்முத்துக்களையும் கேசவனிடம் கொடுத்தார் மாணிக்கம்.

மாணிக்கம் வியாபார விஷயமெல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பி வந்தார். வந்ததும் கேசவனிடம் சென்று தாம் கொடுத்துச் சென்ற நல்முத்துக்களைத் திரும்பக் கொடுக்குமாறு கேட்டார்.

‘‘நல்முத்துக்களா? யாரிடம் கொடுத்தாய்? கனவு ஏதாவது கண்டுவிட்டு வந்து உளறுகிறாயா?’’ என்று கேட்டான் கேசவன்.

RangaRakes tamilnavarasam.com

தம்முடைய நண்பன் இவ்விதம் நடந்து கொள்வான் என்று மாணிக்கம் கனவிலும் நினைக்கவில்லை. இனி அவனிடம் பேசி எந்தவிதப் பயனும் இல்லை என்று நினைத்து மாணிக்கம் நேரே மரியாதைராமனிடம் சென்றார். கேசவன் தன்னை ஏமாற்றி விட்டதைக் கூறினார்.

''அய்யா, உங்கள் வழக்கில் நான் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும்? நீங்கள் நல்முத்துக்களைக் கேசவனிடம் கொடுத்தபோது பார்த்ததாகச் சாட்சிகள் கூட இல்லை. அப்படி இருக்கும்போது கேசவனிடமிருந்து எப்படி நல்முத்துக்களை வாங்க முடியும்? நீங்கள் வீட்டுக்குப் போங்கள். வேறு உபாயம் ஏதாவது செய்வோம் என்று கூறி மாணிக்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைத்தான் மரியாதைராமன்.

மறுநாள் ஓர் ஆள் அனுப்பிக் கேசவனைக் கூட்டி வரச் சொன்னான் மரியாதைராமன்.

கேசவன் வந்ததும் அவனிடம் ஒரு சிறு பேழையைக் கொடுத்தார். அதற்குள் நிறைய முத்துக்கள் இருந்தன.

''என்னிடமிருந்த முத்துமாலையின் சரம் அறுந்து விட்டது. நீங்கள் முத்துக்களைக் கோர்ப்பதில் நிபுணரென்று கேள்விப்பட்டேன். இதில் 100 முத்துக்கள் உள்ளன. இதை மாலையாகக் கோர்த்து வந்து கொடுங்கள்'' என்றான் மரியாதைராமன்.

கேசவன் மரியாதைராமன் கொடுத்த பேழையுடன் வீட்டுக்கு வந்தான். பேழையை ஒரு பெட்டியின் மேல் வைத்துவிட்டு அவசரமாகக் கொல்லைப்புறம் சென்றான்.



திரும்பி வந்து பார்த்தபோது அந்தப் பேழை கீழே விழுந்திருந்தது. அப்பொழுதுதான் ஒரு பூனை அறையில் இருந்து வெளியேவந்து கொண்டிருந்தது. பெட்டிக்குமேல் உள்ள பால் உரிக்காகப் பூனை தாவும்போது பேழை விழுந்திருக்க வேண்டுமெனக் கேசவன் நினைத்தான்.

உடனே கீழே விழுந்து சிதறிக் கிடந்த முத்துக்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் பொறுக்கி எடுத்து எண்ணினான். 98 முத்துக்கள் இருந்தன. 'அய்யோ, நீதிபதி 100 முத்துக்கள் கொடுத்தனுப்பினாரே! அவற்றில் 2 குறைகிறதே! எங்கே போயிருக்கும்' என்று வீடெல்லாம் ஓர் இடம் பாக்கி விடாமல் தேடினான். கடைசி வரையில் 2 முத்துக்கள் கிடைக்கவில்லை.

'இப்பொழுது நாம் 98 முத்துக்களை மட்டும் அவசரமாகக் கோர்த்து எடுத்துப்போய்க் கொடுத்தால் 2 முத்துக்களை நாம் திருடிக் கொண்டோமென்று நீதிபதி கடுமையான தண்டனை விதிப்பாரே! இந்தத் தண்டனையில் இருந்து தப்புவது எப்படி? என்று நினைத்த கேசவனுக்கு மாணிக்கத்திடம் மோசடி செய்து அபகரித்த இரண்டு முத்துக்களின் நினைவு வந்தது.

உடனே அந்த இரண்டு முத்துக்களையும் எடுத்துச் சரத்தில் கோர்த்து 100 முத்துக்கள் கொண்ட மாலையாக ஆக்கி விட்டான் கேசவன்.

மறுநாள் கேசவன் முத்துமாலையைக் கொண்டு போய் மரியாதைராமனிடம் கொடுத்ததும் முதல் வேலையாக மரியாதைராமன் முத்துக்களை எண்ணத் தொடங்கினான்.

RangaRakes tamilnavarasam.com





''நல்லவேளையாக, நாம் நம்மிடம் இருந்த முத்துக்களைச் சேர்த்துக் கோர்த்து வந்தது நல்லதாகப் போய் விட்டது!'' என்று கேசவன் நினைத்தான்.

முத்து மாலையிலுள்ள முத்துக்களை எண்ணி முடித்த மரியாதைராமன் தன் பக்கமிருந்த காவலர்களிடம், ''இவனைக் கைது செய்யுங்கள்'' என்றான்.

காவலர்கள் மரியாதைராமனின் ஆணைப்படி கேசவனைக் கைது செய்யச் சென்றனர்.

''நான் ஒரு பாவமும் அறியேன். நீங்கள் கொடுத்த 100 முத்துக்களையும் மாலையாகக் கோர்த்து வந்திருக்கிறேன்'' என்றான் கேசவன்.

''இல்லை. நான் உன்னிடம் கொடுத்தது 98 முத்துக்கள்தான். அப்படியிருக்க இந்த மாலையில் மேற்கொண்டு 2 முத்துக்கள் எப்படி வந்தன என்ற விவரத்தை நீ சொல்லாவிட்டால் உனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்'' என்றான் மரியாதைராமன்.

தண்டனைக்குப் பயந்த கேசவன் மாணிக்கத்திடம் மோசடி செய்து 2 முத்துக்களை அபகரித்துக் கொண்டதையும், அவைகளையே மாலையில் கோர்த்து எடுத்துக் கொண்டு வந்ததையும் கூறினான்.

அவன் வாயாலேயே உண்மையை வரவழைத்த மரியாதைராமன் மாலையில் அதிகப்படியாகக் கோர்த்திருந்த 2 முத்துக்களை மாணிக்கத்திற்குத் திரும்பக் கொடுத்ததுடன், கேசவனுக்கு ஏமாற்றிய குற்றத்திற்காகத் தண்டனையும் கொடுத்தான்.

RangaRakes
tamilnavarasam.com

# 9. நெல் வியாபாரியின் மோசடி

கனகலிங்கம் என்பவன் ஒரு நெல் வியாபாரி. ஒருநாள் அவனிடம் ராமலிங்கம் என்பவன் நெல் வாங்குவதற்காக வந்தான்.

''அய்யா, நெல்வாங்க வந்திருக்கிறேன். உங்களிடம் உள்ள நெல்லை மாதிரிக்குக் காட்டுங்கள்'' என்று கனகலிங்கத்திடம் கேட்டான் ராமலிங்கம்.

கனகலிங்கம் உள்ளே சென்று ஒரு சிறிய கூடையில் சிறிது நெல்லை எடுத்து வந்து காண்பித்து, ''ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இது தான். பத்து வராகன்களுக்கு வாங்கினாலும் இது தான். என்னிடம் வேறு நெல் கிடையாது'' என்றான் கனகலிங்கம்.

'சரி, ஒரே ஒரு ரகம்தான் வைத்திருக்கிறார் போல் இருக்கிறது!' என்று நினைத்த ராமலிங்கம் கனகலிங்கம் காட்டிய நெல்லிலேயே பத்து வராகன்களுக்குத் தரச் சொல்லிப் பணத்தைக் கொடுத்து விட்டு நெல்லை அளக்கச் சொன்னான்.

பணத்தை வாங்கிக் கொண்ட கனகலிங்கம், ''நெல்லை அளக்க வேண்டிய தேவையில்லை. இதோ இந்தக் கூடையில் இருக்கிறதே நெல், அது தான்; வேறு நெல் என்னிடம் கிடையாது. எடுத்துச் செல்'' என்றான் கனகலிங்கம்.

''என்ன அநியாயம் இது! நான் பத்து வராகன்கள் கொடுத்திருக்கிறேன்!'' என்றான் ராமலிங்கம்.





RangaRakes tamilnavarasam.com

''நான்தான் அப்பொழுதே சொல்லி விட்டேனே! நீ ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இது தான்; பத்து வராகன்களுக்கு வாங்கினாலும் இது தான் என்று. நீ இதற்கு ஒப்புக் கொண்டுதானே பத்து வராகன்களைக் கொடுத்தாய்?'' என்றான் கனகலிங்கம்.

''நான் மாதிரிக்குத்தான் அந்த மாதிரி சொன்னீர்களென்று நினைத்தேன்'' என்றான் ராமலிங்கம்.

''அப்படியானால் அது உன் தப்பிதம்தான்; நான் அதற்குப் பொறுப்பாளியில்லை'' என்றான் கனகலிங்கம்.

ராமலிங்கம் மரியாதைராமனிடம் சென்று தன் வழக்கை எடுத்துரைத்தான்.

மரியாதைராமன் கனகலிங்கத்தையும் கூட்டி வரச் செய்தான்.

அவனிடம் விசாரணை செய்தபோது அவன் முன்போல், ''ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான்; பத்து வராகன்களுக்கு வாங்கினாலும் இதுதான் என்று முதலிலேயே இவரிடம் சொல்லி விட்டேன். எனவே என் பேரில் தவறு இல்லை'' என்றான்.

''உங்களுடைய வழக்கில் உடனடியாகத் தீர்ப்பு வழங்க முடியாது. இன்னும் ஒரு மாதம் கழித்துத்தான் தீர்ப்பு வழங்க முடியும். அதுவரை நீ ராமலிங்கம் வீட்டில் இருந்துகொண்டு அவர் வீட்டில் சாப்பிட்டு வர வேண்டும்'' என்றான் மரியாதைராமன்.

இதைக் கேட்டதும் கனகலிங்கத்திற்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.



''ஒரு மாதம் வரை இலவசச் சாப்பாடு கிடைக்கப் போகிறதே!'' என்று நினைத்தான் கனகலிங்கம்.

''ராமலிங்கம், இருவருக்கும் வேண்டிய சாப்பாட்டை நீதான் தயாரிக்க வேண்டும். நீ தயாரிக்கிற சாப்பாட்டில் பாதியை நீ சாப்பிட்டுவிட்டு பாதிச் சாதத்தைக் கனகலிங்கத்திற்குப் போட வேண்டும்'' என்றான் மரியாதைராமன்.

இதைக் கேட்டதும் ராமலிங்கத்திற்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது.

'குதிரை செத்ததுமல்லாமல் குழி தோண்ட முக்கால் பணம்' என்பதைப் போல், நம்முடைய பத்து வராகன்களும் போய் ஒரு மாதத்திற்குக் கனகலிங்கத்திற்குப் பாதிச் சாப்பாடு போட வேண்டிய நிலை ஏற்பட்டது குறித்து மிகவும் வருந்தினான்.

கனகலிங்கம் சென்ற பிறகு ராமலிங்கத்தைத் தனியாகக் கூப்பிட்ட மரியாதைராமன், ''ராமலிங்கம், உன் வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது. உன் நன்மைக்குத் தான் சொன்னேன். நான் சொல்கிறபடி நட'' என்று கூறியவனாய் ரகசியமாய் அவனிடம் ஏதோ கூறினான் மரியாதைராமன்.

மரியாதைராமன் கூறியதைக் கேட்டதும் ராமலிங்கத்தின் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது.

மறுநாள் கனகலிங்கம் ராமலிங்கத்தின் வீட்டுக்கு வந்து விட்டான். ராமலிங்கம் மரியாதைராமன் சொன்ன வாறு சமைத்துக் கொண்டிருந்தான்.

RangaRakes tamilnavarasam.com

சாப்பாட்டு நேரமானதும் கனகலிங்கத்தின் முன்னால் ஓர் இலையைப் போட்டு ஒரு சாதத்தில் பாதியைக் கிள்ளி இலையில் வைத்து, 'சாப்பிடு' என்றான் ராமலிங்கம்.

''என்ன அயோக்கியத்தனம். பாதிச் சாப்பாடு போடுவதற்குப் பதில் பாதிச் சாதத்தைப் போட்டிருக்கிறாயே!'' என்று கோபமாகக் கேட்டான் கனகலிங்கம்.

''வீண் பேச்சுப் பேசாதே! நீதிபதி உனக்குப் பாதிச் சாதத்தைத்தான் போடச் சொன்னார். ஒரு மாதம் வரை இதைத்தான் உனக்குப் போடுவேன். வேண்டுமானால் போய் நீதிபதியிடம் முறையிட்டுக் கொள்'' என்றான் ராமலிங்கம்.

கனகலிங்கம் மரியாதைராமனிடம் போய் ''அய்யா, ராமலிங்கம் வடிக்கும் சாதத்தில் பாதிச் சாதம் எனக்குப் போடச் சொன்னீர்கள். அவனோ ஒரு சாதத்தில் பாதியைத்தான் எனக்குப் போடுகிறான்'' என்றான்.

''நான் சொல்லும்போது நீயும் மறுப்புச் சொல்லாமல் ஒப்புக் கொண்டாயே, இப்பொழுது வந்து குறை சொன்னால் எப்படி?'' என்று கனகலிங்கத்திடம் கேட்டான் மரியாதைராமன்.

''பாதிச் சாதம் என்றால் மொத்தச் சாப்பாட்டில் பாதிச் சாதம் என்றுதான் நான் நினைத்துக் கொண்டேன்!'' என்றான் கனகலிங்கம்.

''ராமலிங்கமும் அப்படித்தான் நீ சொல்லும் போது நினைத்துக் கொண்டார். அதனால் அவர் பேரிலும் தவறில்லை. அவருடைய பத்து வராகன்களுக்குச் சேர வேண்டிய நியாயமான நெல்லை அளந்து கொடுக்க



உனக்கு விருப்பமில்லாவிட்டால் நீ ஒப்புக் கொண்டபடி ராமலிங்கத்தின் வீட்டில் இருந்து கொண்டு ஒரு மாதம் வரை பாதிச் சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டிரு'' என்றான் மரியாதைராமன்.

''என்னால் பாதிச் சாதத்தைச் சாப்பிட்டு ஒரு வேளை கூட இருக்க முடியாது. நான் அவருக்கு நியாயமாகச் சேர வேண்டிய நெல்லை அளந்து கொடுத்து விடுகிறேன்'' என்றான் கனகலிங்கம்.

RangaRakes tamilnavarasam.com

# 10. மோதிர மோசக்காரன் கதை

ரங்கனும் சோமனும் நண்பர்கள். ஒரு நாள் ரங்கன் சோமனிடம் வந்தான்.

''சோமா, நான் ஒரு கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. உன்னுடைய தங்க மோதிரத்தை ஒரு நாள் இரவல் கொடுத்தால் கல்யாணத்திற்குப் போய் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றான் ரங்கன்.

சோமனும் தன் கையிலிருந்த தங்க மோதிரத்தைக் கழற்றி ரங்கனிடம் கொடுத்தான்.

மோதிரம் வாங்கிச் சென்ற ரங்கன் வெகுநாளாகியும் திரும்பி வரவில்லை. சோமன் அவன் வீட்டுக்குச் சென்றான்.

''என்ன ரங்கா! என்னிடமிருந்து தங்க மோதிரம் இரவலாக வாங்கிப் போனாயே! அதை இன்னும் திருப்பித் தரவில்லையே!'' என்றான் சோமன்.

''தங்க மோதிரமா? என்னிடம் ஒரு தங்கமோதிரம் சொந்தமாக இருக்கும்போது நான் ஏன் உன்னிடம் இரவல் வாங்குகிறேன். இதோபார் என் மோதிரத்தை!'' என்று சோமனுடைய மோதிரத்தையே சோமனுக்குக் காண்பித்தான் ரங்கன்.

''அது என் மோதிரமாயிற்றே!'' என்றான் சோமன்.

''போ, போ, வீண் பேச்சுப் பேசாதே!'' என்று சோமனை விரட்டி விட்டான் ரங்கன்.



சோமன் தான் ஏமாற்றப்பட்டதை நினைத்து மனம் வருந்தியவனாய் மரியாதைராமனிடம் சென்றான்.

''அய்யா, என்னுடைய தங்க மோதிரத்தை இரவல் வாங்கிக் கொண்டு தன்னுடையதுதான் என்று ரங்கன் சாதிக்கிறான்'' என்றான் சோமன்.

மரியாதைராமன் ரங்கனை வரவழைத்து விசாரித்தபோது, ''அய்யா இவன் பொய் சொல்கிறான். மோதிரம் என்னுடையதுதான்'' என்றான்.

''நீங்கள் இருவரும் சொல்வதிலிருந்து உண்மையாகவே மோதிரம் யாருக்குச் சொந்தம் என்பது தெரியவில்லை. நாளைய தினம் நீங்கள் இரண்டு பேரும் சபைக்கு வாருங்கள். ஒரு மத்தியஸ்தரை வைத்து இந்த மோதிரத்தை உரைத்துப் பார்த்து இதன் மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம். மத்தியஸ்தர் மோதிரத்தின் மதிப்பு எவ்வளவு சொல்கிறாரோ அந்தத் தொகைக்கு மோதிரத்தை விற்று ஆளுக்குப் பாதியாக பகிர்ந்து கொள்ளுங்கள் என்றான் மரியாதைராமன்.

மறுநாள் ஒரு பொற்கொல்லர் சபைக்கு வரவழைக்கப்பட்டார். அவரிடம் மோதிரம் கொடுக்கப் பட்டது. அவர் அதை உரைகல்லில் வைத்துத் தேய்த்தார். இவ்வாறு தேய்க்கும்போது அவர் அதிகமாகத் தேய்ப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த சோமன், ''அய்யா என் மோதிரத்தை அதிகமாக உரைத்துத் தேய்க்கிறீர்களே!'' என்று கதறினான்.

ரங்கனோ பேசாமல் இருந்தான். இதற்கு அடுத்தபடியாகப் பொற்கொல்லர் அந்த மோதிரத்தின்





மதிப்பை மிகக் குறைவாகச் சொல்லிவிட்டார்.

பொற்கொல்லர் சொன்ன விலையைக் கேட்டதும் சோமன் துள்ளிப் பதைத்தான்.

''என்ன அநியாயம் இது! நான் வாங்கிய விலையில் கால்பங்கு கூட இல்லையே! இதுதானா நீங்கள் போடும் மதிப்பு?'' என்று கூச்சலிட்டான்.

இதைக் கேட்ட மரியாதைராமன், ரங்கனைப் பார்த்து, ''உண்மையாகவே இது உன்னுடைய மோதிரமாக இருந்தால் இந்நேரம் நீ பேசாமல் இருந்து கொண்டிருக்க மாட்டாய், உண்மையை வரவழைப்பதற்காக நான் தான் அதிகமாக உரைக்கச் சொல்லியும், மதிப்பைக் குறைத்தும் சொல்லச் சொன்னேன். இதில் இருந்து மோதிரத்திற்கு உரியவர் யாரென்று தெரிந்து விட்டது. சோமனை ஏமாற்றிய குற்றத்திற்காக ஒரு மாதம் சிறைத் தண்டனை உனக்கு அளிக்கிறேன். இந்த மோதிரத்தை சோமனுக்குத் திருப்பிக் கொடுக்கிறேன்'' என்று தீர்ப்பளித்தான் மரியாதைராமன்.

RangaRakes tamilnavarasam.com

# 11. காதுக் கடுக்கனைத் திருடியவன்

மணிவண்ணன் என்பவர் ஒரு வியாபாரி தொழிலில் நல்ல இலாபம் வந்தபடியால் வைரக் கடுக்கன்கள் செய்து இரண்டு காதுகளிலும் போட்டுக் கொண்டார்.

ஒரு நாள் வியாபார நிமித்தமாக அவர் வெளியூர் செல்ல வேண்டி நேரிட்டது. இரவு வெகு நேரமாகி விட்டதால் அங்குள்ள சத்திரத்தின் திண்ணையில் படுத்துக் கொண்டார். அவ்வாறு படுக்கும்போது அவர் ஒருக்களித்தவாறு படுத்திருந்தார். அவருடைய இடது காது தரையிலும், வலது காது மேற்புறமாகவும் இருந்தது.

மணிவண்ணனுக்கு எதிரே ஒரு வழிப் போக்கன் படுத்திருந்தான். அவன் மணிவண்ணனின் வலது காதில் மின்னும் வைரக் கடுக்கனைப் பார்த்து விட்டான். அவன் மிகவும் பொல்லாதவன்.

மணிவண்ணன் நன்றாக தூங்கியதும் அவருக்கு எதிரே படுத்துக் கொண்டிருந்தவன் மெல்ல எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

எல்லோரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதும் மெதுவாக மணிவண்ணனின் வலது காதிலிருந்த கடுக்கனைக் கழற்றித் தனது இடது காதில் போட்டுக்கொண்டு முன் போலவே அவர் எதிரில் படுத்துக் கொண்டான்.





RangaRakes
tamilnavarasam.com

காலையில் விழித்து எழுந்த மணிவண்ணன் தனது வலது காதில் கடுக்கன் இல்லாததைக் கண்டார்.

எதிரே படுத்திருந்தவனது இடது காதில் தன்னுடைய வைரக் கடுக்கன் இருந்ததைக் கண்டார்.

''திருட்டுப் பயலே, என்னுடைய கடுக்கனைத் திருடிக் கொண்டு என் எதிரிலேயே படுத்திருக்கிறாயே?'' என்றார் மணிவண்ணன்.

திருடனோ, ''யாரைப் பார்த்துத் திருடன் என்கிறாய். நீதான் என் காதில் இருந்த ஒரு கடுக்கனைத் திருடி உன் காதில் போட்டுக் கொண்டிருக்கிறாய். நீதான் திருடன். வா, மரியாதைராமனிடம் செல்வோம்'' என்று கூறியவாறு மணிவண்ணனை அழைத்துக்கொண்டு மரியாதை ராமனிடம் சென்றான்.

மணிவண்ணனுக்கோ தன் காதுக் கடுக்கனில் ஒன்று போனதுமல்லாமல் தன்னையே திருடனாக்கி விட்டானே என்று வருத்தம் ஏற்பட்டது.

இவர்களுடைய வழக்கைக் கேட்ட மரியாதைராமன், ''நீங்கள் இந்த மாதிரி ஒருவரையொருவர் திருடன் என்று கூறுவதில் இருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது. நீங்கள் இருவரும் சத்திரத்தில் எவ்வாறு படுத்தீர்களோ அதைப் போல இங்கு படுத்துக் காட்டுங்கள்'' என்றான்.

இருவரும் எதிரும் புதிருமாக ஒருக்களித்துப் படுத்திருந்தனர்.

அப்பொழுது மணிவண்ணன் இடது காது தரையில் இருந்தது. திருடனது இடது காது மேலே இருந்தது. அந்தக்



காதில் கடுக்கன் இருந்ததையும், மேல் புறமாக இருந்த மணிவண்ணனின் வலது காது காலியாக இருந்ததையும் மரியாதைராமன் கண்டான்.

மணிவண்ணனின் மேல் புறமாக உள்ள வலது காது காலியாக இருந்தது. திருடுவதானால் அந்தக் காதில் இருந்துதான் ஒருவன் திருடியிருக்க வேண்டும். எதிரே படுத்திருந்தவனது காலியான இடது காது தரையில் படிந்துள்ளது. இதில் இருந்து ஒருவரும் கடுக்கனைத் திருடியிருக்க முடியாது. எனவே மணிவண்ணனின் கடுக்கனைத் திருடியவன் இவனே! என்று திருடனைப் பார்த்துக் கூறிய மரியாதைராமன் அவனிடமிருந்து கடுக்கனை வாங்கி மணிவண்ணனுக்கு கொடுத்துத் திருடனுக்கு ஆறுமாதச் சிறைத்தண்டனையும் கொடுத்தான்.

RangaRakes tamilnavarasam.com

# 12. ஆளுக்குத் தகுந்த சாட்சி

கண்ணப்பன் என்பவனிடம் விலை உயர்ந்த இரத்தினக்கல் ஒன்று இருந்தது. ஒருமுறை அவன் தேசாந்திரம் செல்ல வேண்டியிருந்தது. இரத்தினக் கல்லைத் தனக்குத் தெரிந்த நண்பனான சாமிக்கண்ணு என்பவனிடம் கொடுத்து, ''நண்பா நான் தேசாந்திரம் போகிறேன். வருவதற்குப் பல மாதங்கள் ஆகும். அதுவரை இந்த இரத்தினக் கல்லைப் பத்திரமாக வைத்திருந்து நான் வந்ததும் கொடு'' என்றான் கண்ணப்பன்.

சாமிக்கண்ணும் அந்த இரத்தினக் கல்லை வாங்கிக் கொண்டான்.

பல மாதங்கள் சென்றன.

கண்ணப்பன் தேச சஞ்சாரம் செய்து முடித்து விட்டு ஊருக்குத் திரும்பி வந்தான். வந்தபின் ஒரு நாள் சாமிக்கண்ணுவின் வீட்டிற்குச் சென்று தன் இரத்தினக் கல்லைத் திரும்பக் கொடுக்குமாறு கேட்டான்.

''உன்னுடைய இரத்தினக் கல்லை நான் அப்பொழுதே திருப்பிக் கொடுத்து விட்டேனே'' என்றான் சாமிக்கண்ணு.

கண்ணப்பன் மரியாதைராமனிடம் சென்று முறையிட்டான்.

கண்ணப்பன் எப்படியும் மரியாதைராமனிடம் செல்வான் என்பது சாமிக்கண்ணுவுக்குத் தெரியும். எனவே கண்ணப்பன் சென்றதும் தன் நண்பர்களான



சவரத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, மண்பாண்டத் தொழிலாளி ஆகிய மூவரிடமும், ''இதோ பாருங்கள், கண்ணப்பனிடம் நான் இரத்தினக் கல்லைத் திருப்பிக் கொடுக்கும் போது நீங்கள் பார்த்ததாக மரியாதைராமன் சபையில் சாட்சி சொல்ல வேண்டும்'' என்று முன்கூட்டியே சொல்லி வைத்து விட்டான்.



RangaRakes tamilnavarasam.com

கண்ணப்பன் மரியாதைராமனிடம் தன் வழக்கைக் கூறியதும் மரியாதைராமன் சாமிக்கண்ணுவை அழைத்து வரச் சொன்னார்.

சாமிக்கண்ணு வந்ததும், ''இவருடைய இரத்தினக் கல்லை நான் அப்பொழுதே திரும்பக் கொடுத்து விட்டேனே!'' என்றான்.

''நீ இவரிடம் கொடுக்கும் போது சாட்சிகள் யாராவது இருந்தார்களா?'' என்று கேட்டான் மரியாதைராமன்.

''என் வீட்டுக்கு வழக்கமாக வரும் சலவைத் தொழிலாளியும், சவரத் தொழிலாளியும், மண்பாண்டத் தொழிலாளியும் நான் இரத்தினக் கல்லை இவரிடம் கொடுக்கும் போது இருந்தார்கள். அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டால் உண்மையைச் சொல்வார்கள்'' என்றான் சாமிக்கண்ணு.

மரியாதைராமன், சாமிக்கண்ணு சொன்ன மூன்று பேரையும் அழைத்து வரச் சொன்னான். மூன்று பேரையும் தனித்தனி அறைகளில் சிறை வைக்கச் சொன்னான்: மூவரிடமும் அவர்கள் பார்த்ததாகச் சொல்லும் இரத்தினக் கல்லைப் போல் களி மண்ணில் செய்து காட்ட வேண்டும் என்று உத்தரவிட்டான்.

மூன்று பேருமே இரத்தினக் கல்லைப் பார்த்தறி யாதவர்கள். இருந்தாலும் மூவரும் தங்களுக்குத் தெரிந்த பொருள்களைப் போல் களிமண்ணால் செய்தனர்.





RangaRakes tamilnavarasam.com

சவரத் தொழிலாளி சவரக் கத்தி தீட்டும் சாணைக் கல்லைப் போலவும், சலவைத் தொழிலாளி துணி துவைக்கும் கல்லைப் போலவும், மண்பாண்டத் தொழிலாளி வண்டி சக்கரம் போலவும், களிமண்ணால் செய்தார்கள்.

இவைகளைப் பார்த்த மரியாதைராமன் அவர்கள் பொய் சாட்சி கூறுகிறார்கள் என்பதை புரிந்து கொண்டான்.

''சாமிக்கண்ணு, உன்னுடைய சாட்சிகள் சொல்வதி லிருந்து அவர்கள் இரத்தினக் கல்லையே பார்த்திராத வர்கள் என்று தெரிகிறது. உன் வாயால் நீ உண்மையைச் சொல்லாவிடில் உனக்குக் கடுந்தண்டனை தருவேன்'' என்றான் மரியாதைராமன்.

சாமிக்கண்ணு தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு இரத்தினக் கல்லைத் திருப்பிக் கொடுத்து விட்டான்.

மரியாதைராமன் ஏமாற்றுக்கார சாமிக்கண்ணுவுக்கும், பொய்சாட்சி கூறிய மூவருக்கும் ஆளுக்கு ஐம்பது கசையடிகள் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டான்.

## 13. பூதக் கூண்டில் ஒற்றன்

சாம்பசிவம் என்பவன் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து ஆயிரம் வராகன்கள் சேர்த்து விட்டான். அதனை ஒரு முடிப்பாகக் கட்டி, ஒரு பானையில் போட்டு மேலே துவரம் பருப்பைப் போட்டு மூடினான்.

ஒருமுறை அவன் தன் குடும்பத்தாருடன் வெளியூர் செல்ல நேரிட்டது. தன்னிடமிருந்த பணமுடிப்பைக் கொண்ட துவரம்பருப்புப் பானையை எவரிடமாவது கொடுத்துவிட்டுச் செல்ல நினைத்தான்.

அவ்வூரில் பொன்னுசாமி என்று ஒருவர் இருந்தார். அவரிடம் சாம்பசிவம் தன்னுடைய துவரம் பருப்புப் பானையைக் கொண்டு சென்றான்.

''அய்யா, இந்தப் பானை நிறையத் துவரம் பருப்பு இருக்கிறது. இதைப் பத்திரமாக வைத்திருந்து நான் ஊரில் இருந்து திரும்பி வந்ததும் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என்றான் சாம்பசிவம்.

''அதற்கென்ன! தாராளமாக வைத்து விட்டுப்போ!'' என்றார் பொன்னுசாமி.

அந்தப் பானையில் துவரம் பருப்புதான் இருக்குமென்று பொன்னுசாமி நினைத்தார். ஏனென்றால் சாம்பசிவத்திடம் அவ்வளவு பொருள் இருக்குமென்று யாருக்கும் தெரியாது, அவ்வளவு எளிமையாக இருப்பான். எனவே அவன் துவரம் பருப்புப் பானையில் பணமுடிப்பு வைத்திருப்பான் என்று பொன்னுசாமி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

RangaRakes tamilnavarasam.com

ஒரு நாள் பொன்னுசாமியின் வீட்டுக்கு விருந்தாளிகள் நிறையப்பேர் வந்துவிட்டார்கள். வீட்டில் துவரம் பருப்பு இல்லை. பொன்னுசாமியின் மனைவி ''விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். வீட்டில் துவரம் பருப்பு துளிக்கூட இல்லையே! சீக்கிரம் போய் வாங்கி வாருங்கள்!'' என்றாள்.

''அவசரத்திற்கு சாம்பசிவம் கொடுத்துவிட்டுப் போன பானையில் இருந்து துவரம்பருப்பு எடுத்து கொள். பிறகு நிதானமாகக் கடையில் வாங்கி வந்து அதில் போட்டு நிரப்பி விடலாம்'' என்றார் பொன்னுசாமி.

பொன்னுசாமியின் மனைவியும் துவரம் பருப்புப் பானையில் கையைவிட்டுப் பருப்பை எடுக்கும்போது பானையின் அடியில் ஏதோ முடிப்பு மாதிரி தட்டுப்பட்டது.

உடனே அவள் பானையைக் கவிழ்த்தாள். பானையின் அடியில் வைக்கப்பட்டியிருந்த பணமுடிப்பும் துவரம் பருப்புடன் சேர்ந்து வெளிப்பட்டது.

பணமுடிப்பைப் பார்த்த பொன்னுசாமியின் மனைவி, ''சீக்கிரம் இங்கே வாங்க! இந்தப் பானைக்குள் ஒரு பணமுடிப்பு இருக்கிறது!'' என்று தன் கணவனைப் பார்த்துச் சொன்னாள்.

பொன்னுசாமியும் அவ்விடம் வந்துபார்த்தார். பணமுடிப்பைப் பிரித்து உள்ளேயிருந்த நாணயங்களை எண்ணிப் பார்த்தார். ஆயிரம் வராகன்கள் இருந்தன.

''இதை எடுத்துப் போய்ப் பத்திரமாக வை. இதைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாதே!'' என்று மனைவியிடம் பணமுடிப்பைக் கொடுத்தனுப்பினார் பொன்னுசாமி.



பிறகு கடைக்குச் சென்று துவரம் பருப்பு வாங்கி வந்தார். பானை நிறையத் துவரம் பருப்பைப் போட்டுப் பழையபடி மூடிவிட்டார் பொன்னுசாமி.

சாம்பசிவம் ஊரில் இருந்து வந்தான்.

''அய்யா, என்னுடைய துவரம்பருப்புப் பானையைத் தருகிறீர்களா?'' என்று கேட்டான்.

''நீ வைத்த இடத்திலேயே இருக்கிறது. எடுத்துச் செல்'' என்றார் பொன்னுசாமி.

சாம்பசிவம், வீட்டுக்கு வந்து துவரம்பருப்புப் பானையைக் கவிழ்த்துப் பார்த்தான். உள்ளே பணமுடிப்பைக் காணவில்லை.

அவனுக்கு பகீர் என்று ஆகிவிட்டது. பொன்னுசாமியிடம் போய்க் கேட்டதில், ''உன்னுடைய துவரம் பருப்புப் பானையை நான் தொடக்கூட இல்லை. நீ எப்படிக் கொடுத்தாயோ, அப்படியே திருப்பிக் கொடுத்துவிட்டேன். நீ கவன மறதியாக வேறு எங்கோ வைத்துவிட்டு என்பேரில் அபாண்டமாகப் பழி சுமத்துகிறாய்'' என்றார் பொன்னுசாமி.

சாம்பசிவம் ஏமாற்றத்துடன் மரியாதைராமனிடம் சென்றான்.

''அய்யா, நான் வயிற்றுக்குக்கூடச் சரியாகச் சாப்பிடாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஆயிரம் வராகன்கள் சேர்த்து ஒரு முடிப்பாகக் கட்டித் துவரம் பருப்புப் பானையில் போட்டு வைத்திருந்தேன். அந்தப் பானையைப் பொன்னுசாமியிடம் கொடுத்துவிட்டு வெளியூர் சென்று

RangaRakes tamilnavarasam.com

திரும்பி வந்தேன். நான் வந்த பிறகு அவரிடமிருந்து வாங்கி வந்த துவரம் பருப்புப் பானையில் நான் வைத்திருந்த பணமுடிப்பைக் காணவில்லை. கேட்டதற்கு, ''நான் பார்க்கவேயில்லை! என்று பொன்னுசாமி கூறுகிறார்'' என்றான் சாம்பசிவம்.

''அய்யா, உங்கள் வழக்குச் சிக்கலானது. நீங்கள் அவரிடம் பணமுடிப்பு உள்ளே இருக்கிறது என்று ஆரம்பத்திலேயே சொல்லவில்லை. அதுவும் தவிர உங்களிடம் ஆயிரம் வராகன்கள் இருக்கும் என்று நம்பும்படியாகவும் நீங்கள் நடந்து கொள்ளவில்லை. நீங்கள் எவ்வளவு சொன்னாலும் உங்கள் பேச்சை யாரும் நம்பமாட்டார்கள்'' என்றான் மரியாதைராமன்.

''ஐயோ, நீங்களும் கைவிட்டால் நான் வேறு எங்கே போவேன்'' என்று அரற்றினான் சாம்பசிவம்.

''அவசரப்படாதே, பொன்னுசாமியைக் கூப்பிட்டு விசாரிக்கிறேன்'' என்று கூறி சாம்பசிவத்தை அனுப்பி விட்டான் மரியாதைராமன்.

பொன்னுசாமி வந்ததும், ''உங்கள் பேரில் சாம்ப சிவம் என்பவர் ஒரு பிராது கொடுத்திருக்கிறார். அவர் உங்களிடம் கொடுத்துச் சென்ற துவரம் பருப்புப் பானையில் ஆயிரம் வராகன்கள் கொண்ட பண முடிப்பு ஒன்று வைத்திருந்தாராம். திரும்ப வந்து வாங்கிச் சென்ற பின் அதில் பணமுடிப்பைக் காணவில்லை என்று புகார் செய்திருக்கிறார்'' என்றான் மரியாதைராமன்.

''நான் ஒரு பாவமும் அறியேன். என் மீது அபாண்ட மாக வீண்பழி சுமத்துகிறான் சாம்பசிவம்'' என்றார் பொன்னுசாமி.



''சரி நாளைய தினம் உங்கள் மனைவியுடன் வந்து நமது ஊர்க் கோயிலை மும்முறை வலம் வந்து சத்தியம் செய்ய வேண்டும்'' என்றான் மரியாதைராமன்.

மறுநாள் மரியாதைராமன் ஒரு பூதக் கூண்டைத் தயாரிக்கச் சொன்னான். அதற்குள் எவரும் அறியா வண்ணம் ஓர் ஒற்றனை உட்கார வைத்துப் பொன்னு சாமியும் அவர் மனைவியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைத் தமக்குத் தெரிவிக்கும் படி ஒற்றனிடம் கூறியிருந்தான் மரியாதைராமன்.

பொன்னுசாமியும் அவன் மனைவியும் மரியாதை ராமன் சபைக்கு வந்தனர். சபையில் ஒரு பூதக் கூண்டு இருப்பதைக் கண்டனர்.

அவர்களைப் பார்த்த மரியாதைராமன், ''இந்தப் பூதக் கூண்டை நீங்கள் இழுத்தவாறே கோயிலை மும்முறை சுற்றி வந்து சத்தியம் செய்ய வேண்டும்'' என்றான்.

பொன்னுசாமியும் அவன் மனைவியும் பூதக் கூண்டை இழுத்தவாறே கோயிலை வலம் வந்து கொண்டிருந்தனர்.

இரண்டாவது சுற்று வரும்போது, ''ஆயிரம் வராகனுக்காக இந்தப் பூதக் கூண்டை இழுத்துக் கொண்டு கோயிலைச் சுற்றி வந்து சத்தியம் செய்கிறோமே!'' என்று வருத்தத்துடன் தன் கணவனிடம் கூறினாள் பொன்னுசாமியின் மனைவி.

''அதெல்லாம் பார்த்தால் நடக்குமா? ஆயிரம் வராகன்கள் கிடைக்கும்போது இன்னும் ஐம்பது

RangaRakes tamilnavarasam.com





சுற்றுகள் சுற்றி வந்து சத்தியம் செய்யலாம். சும்மா கிடைக்குமா ஆயிரம் வராகன்கள்?'' என்றான் பொன்னுசாமி.

இவர்கள் கோயிலைச் சுற்றி வந்து சத்தியம் செய்தவுடன் பூதக் கூண்டு மரியாதைராமன் சபைக்குக் கொண்டுவரப்பட்டது.

மரியாதைராமன் பூதக் கூண்டில் இருந்த ஒற்றனை வெளியே வரவழைத்து ''பொன்னுசாமியும் அவர் மனைவியும் என்ன பேசிக் கொண்டார்கள்?'' என்று கேட்டான்.

ஒற்றன் அவர்கள் பேசியதை ஒன்று விடாமல் கூறினான்.

''உங்கள் வாய் மூலமாகவே உண்மை வெளி வந்து விட்டது. இனி நீங்கள் தப்பமுடியாது'' என்று மரியாதைராமன் கூறினான். பொன்னுசாமியிடம் ஆயிரம் வராகன்களை வாங்கி சாம்பசிவத்திற்குக் கொடுத்ததுடன் நில்லாமல், பொய்ச்சத்தியம் செய்த பொன்னுசாமிக்கும், அவர் மனைவிக்கும் நூறு வராகன்கள் அபராதம் விதித்தான்.

* * * * *

RangaRakes tamilnavarasam.com